<u>மிகவும் அவசரம்/ உடனடி கவனத்திற்கு</u>

<u>பதிவுத்துறை</u>

அனுப்புநர்
பதிவுத்துறைத்தலைவர்
100 சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028.

பெறுநர்
சார்பதிவாளர்கள்
அனைவருக்கும்

<u>எண்.10751/சிஎஸ்1/2016 நாள்: 21.1.2019</u>

ஐயா/அம்மையீர்,

பொருள்: துறைக்கட்டணங்கள் பணம் செலுத்துகை – பதிவுப்பொது மக்களால் துறைக்கட்டணங்கள் செலுத்துப்படுதல் – அறிவுரைகள் – தொடர்பாக

பார்வை: 1. இவ்வலுவலக சுற்றறிக்கை எண்.37/சி1/09 நாள்: 8.9.2009

2. இவ்வலுவலகக் கடித எண்.5642/சிஎஸ்1/2012 நாள்: 7/1/2015 மற்றும் 12.2.2015, .1..2016 (துணைபதிவுத்துறைத்தலைவர்களுக்கு முகவரிக்கப்பட்டது)

3. அரசு வணிகவரி மற்றும் பதிவுத்துறைக் கடித எண்.153 நாள்:5/12/2018

••• •••

துறைக்கட்டணங்கள் ரூ.1000/–க்கு மேற்படின் கேட்புக் காசோலை மட்டிலுமே செலுத்தப்படல் வேண்டும் என பார்வை 1ல் கண்ட சுற்றறிக்கையின்வழி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

12.1.2015/19.1.2015/9.3.2016 முதல் வங்கிகள் மூலம் நேரடியாக/இணையவழி (offline/online) பணம் செலுத்திடும் முறையானது (e–payment) கூடுதல் விருப்பத் தெரிவு முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவுரைகள் பார்வை 2ல் கண்ட கடிதங்களின்வழி அளிக்கப்பட்டுள்ளன.

போலி முத்திரைத்தாட்களை அறவே ஒழித்திடும் நோக்கில் மின்னணு முத்திரை பதிப்பு முறை (e–stamping) சென்னையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 9 அலுவலகங்களில் முன்னோடி திட்டமாக 27.5.2010ல் செயல்படுத்தப்பட்டு 6.2.2011ல் சென்னையில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது மாநகராட்சி பகுதிகளில் உள்ள 56

சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆக 119 சார்பதிவாளர் அலுவலகங்களில் மின்னணு பதிப்பு முறை செயல்படுத்தப்படுகிறது.

சீரிய, தரமான, விரைவான, எளிமையான, பாதுகாப்பான மின் செலுத்துகை முறையினை ஊக்குவித்திடவும் மேன்மேலும் அதிகரித்திடும் விதமாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு துறைக்கட்டணங்களை (முத்தரைத் தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள்) வசூலித்திட பார்வை 3ல் கண்ட கடிதவழி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. ரூ.1000/-க்கு குறைவாக வசூலாகும் துறைக்கட்டணங்கள் | ரொக்கம் (by way of cash) |
| 2. ரூ.1000/-க்கு மேற்பட்டு ரூ.5000/-க்குக் கீழ் | கேட்புக்காசோலை (DD ) |
| 3. இணையவழி/நேரடியாக வங்கி மூலம் பணம் செலுத்தும் முறை (online/offline payment) | எந்த உச்ச வரம்புமின்றி (without any limit) |

எனவே மேற்கண்ட அரசு நெறிமுறையின்படி துறைக்கட்டணங்களை வசூலிக்க உரிய நடவடிக்கைகளை தவறாது மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலினை மாவட்டப்பதிவாளர்களுக்கும் மாவட்டப்பதிவாளர்கள் துணைபதிவுத்துறைத்தலைவர்களுக்கும் துணைபதிவுத்துறைத்தலைவர்களால் ஒருங்கிணைந்த ஒரே அறிக்கையாக இவ்வலுவலகத்திற்கும் அனுப்பபடல் வேண்டும்.

கூடுதல்பதிவுத்துறைத்தலைவர் (மு & பி)

21/1/19

நகல்

மாவட்டப்பதிவாளர்கள் அனைவருக்கும்

துணைபதிவுத்துறைத்தலைவர்கள் அனைவருக்கும்

பதிவுத்துறைத்தலைவர் அலுவலக உயர் அலுவலர்கள் அனைவருக்கும்

சி பிரிவு

முக்கிய ஆணைக்கோர்வை

உதிரி